

பெரம்பலூர் மாவட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட லாடபுரம் மற்றும் மேலப்புலியூர் ஊராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் மிருணாளினி, தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் முன்னிலையில், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட லாடபுரம் பகுதியில் ரூ.6.05 கோடி மதிப்பீட்டில் 4 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இதில் மாவட்ட ஆட்சியர் மிருணாளினி, மாவட்ட கழக பொருளாளர் வீ. ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.இராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம் உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், மகளிர் திட்டம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில், 405 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.42.63 கோடி மதிப்பில் 16.09.2025 அன்று வங்கிக்கடன் உதவிகளை வழங்கினார். உடன் மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், நகர்மன்ற தலைவர்கள் திருமதி வாணீஸ்வரி, (உதகை), திருமதி சுசீலா (குன்னூர்), திருமதி ஜெயகுமாரி (கோத்தகிரி) உட்பட பலர் உள்ளனர்.

### ‘ஓரணியில் தமிழ்நாடு’ முன்னெடுப்பில்

# கரூர் மாவட்டத்தில் அதிகளவில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்!

## மாவட்டச் செயலாளர் செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேட்டி!

கரூர், செப்.18.

“ஓரணியில் தமிழ்நாடு” முன்னெடுப்பில் கரூர் மாவட்டத்தில் அதிக அளவில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர் என மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. கரூர் மாவட்ட கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

“ஓரணியில் தமிழ்நாடு” என்கிற முன்னெடுப்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து குடும்பங்களையும் நேரில் சந்தித்து கழகத்தில் இணைப்பதற்கான அறிவிப்பை கழகத்தின் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அவர்களது உத்தரவின் அடிப்படையில் கரூர் மாவட்டத்தில் 1055 வாக்குச்சாவடிகளிலும் அனைத்து குடும்பத்தினரையும் நேரில் சென்று சந்தித்து கழக அரசினுடைய, முதலமைச்சர் அவர்களுடைய நான்காண்டு சாதனைகளை எடுத்துக் கூறி உறுப்பினர் சேர்க்கை பயணத்தை சிறப்பாக தொடங்கினோம்.

அந்த வகையில் கரூர் மாவட்டத்தை பொறுத்த வரை நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் மிகச் சிறப்பாக உறுப்பினர் சேர்க்கை பணியினை கழகத் தோழர்கள் நிறைவேற்றி இருக்கின்றனர். தமிழ்நாடு முழுவதும் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில் ஏறத்தாழ ஒரு கோடி குடும்பங்கள் தங்களை உறுப்பினராக இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினர் சேர்க்கையினுடைய இரண்டாம் கட்டமாக கரூர் மாவட்டத்தில் இருக்கக்கூடிய 1055 வாக்குச்சாவடிகளிலும், செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாள் அன்று ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் பொறுப்பாளர்கள் நிர்வாகிகள் அனைவரும் ஒன்றிணைந்து புதிய உறுப்பினர்களாக சேர்ந்தவர்களை அழைத்து உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

செப்டம்பர் 20ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் அனைத்து கழக மாவட்டங்களில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையினுடைய பெருமையை சேர்த்து கொண்டாடும் வகையில், கரூர் மாவட்ட அளவில் மாபெரும் பொதுக்கூட்டம் கரூர் 80 அடி சாலையில் நடைபெற இருக்கிறது. 20ஆம் தேதி நடைபெறுகின்ற அந்த பொதுக்கூட்டத்தில் “ ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கையில் பங்குபெற்ற கழகத்தினுடைய நிர்வாகிகள் கலந்து கொள்கின்ற மாவட்ட திமுக சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற இருக்கிறது.

இலக்கை விட அதிக அளவில் கரூர் மாவட்டத்தில் 60 சதவீதம் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திமுக பவளவிழா கண்ட இயக்கம். நீண்ட நெடிய காலம் பல்வேறு வரலாற்றுச் சாதனைகளை தமிழ்நாடு மக்களுக்கு வழங்கிய இயக்கம். அரசினுடைய திட்டங்களை செயல்படுத்துவதில், நலப்பணிகளையும் முன்னெடுப்பதில் ஒவ்வொரு ஆண்டும் திராவிட மாடல் அரசு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் முன்மாதிரியாக செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு செந்தில் பாலாஜி தெரிவித்தார். அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பிஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் க. சிவகாம சுந்தரி மற்றும் நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கரூர் மாவட்ட கழகச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ., கரூர் சட்டமன்றத் தொகுதி, ராமேஸ்வரப்பட்டியில் வாக்காளர்களுடன் இணைந்து தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

# திமுக தகவல் தொழில்நுட்ப அணி,

# மாவட்ட, துணை, மற்றும் தொகுதி, நிர்வாகிகள் நியமனம்!

## தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

### நாமக்கல் மேற்கு மாவட்டம்

மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்ட **திரு. ஆர் கௌதம்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு. கே. என் அருள் ஜோதி** அவர்கள் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) குமாரபாளையம் தொகுதி **திரு.**R. **வடிவேல்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) பரமத்திவேலூர் தொகுதி **திரு.** S.**தினேஷ் குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) திருச்செங்கோடு தொகுதி **திரு.ஷேக் மீரான்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.**T.**பரசுராமன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) நியமிக்கப்பட்ட **திருமதி. ஆர். தாரணி** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திருமதி. எம் கவிப்பிரியா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட **திரு.பி.ஆனந்த்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.டி கார்த்திக்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. மோகனவேல்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.**S.**சுகன்யா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### குமாரபாளையம் சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) நியமிக்கப்பட்ட **திரு.பூபதிராஜு** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு.கி.கோகுல கண்ணன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.**S.**கார்த்திக் ராஜ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.**M.**ஸ்ரீதேவி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்,

### பரமத்திவேலூர் சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.**S.**லோகேஸ்வரன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) நியமிக்கப்பட்ட **திரு. யுவராஜ்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்கு பதிலாக **திரு. எம்.சுரேஷ்குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.** B.**வசந்தி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

மாவட்ட ஒருங்கிணைப்பாளராக **திரு. மே.அருண்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக(களப்பணி) திருப்பூர் வடக்கு தொகுதி நியமிக்கப்பட்ட **திரு. ரவி சங்கர்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு ம. நவீன் குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) அவிநாசி தொகுதி நியமிக்கப்பட்ட **திரு பார்த்திபன்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு. பா. சதீஷ் குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு** P.**லோகநாதன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி எஸ். பரமேஸ்வரி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு நவீன் ராஜ்** (கூடுதலாக) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.சந்திரோதயன்(எ) உதயா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.ராஜீவ்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **செல்வி. கி பத்மாவதி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### அவினாசி சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு செ.சங்கர்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. ரா கார்த்தி** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.அந்தோணி தாசன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி** R. **கல்பனா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### ஈரோடு மத்திய மாவட்டம்

ஈரோடு மத்திய மாவட்ட ஒருங்கிணைப்பாளராக **திரு.எம். யுவராஜன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) பெருந்துறை தொகுதி **திரு.செந்தில் குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) பவானி தொகுதி **திரு** M.**ஜெகநாதன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. து.குமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. சுரேஷ் குமார்** (கூடுதலாக) அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி.மா.புஷ்பலதா** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

### பெருந்துறை சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.** N. **மகேந்திரன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. கா.வசந்தகுமார்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) திருமதி. **கி.உமா மகேஸ்வரி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### பவானி சட்டமன்ற தொகுதி

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (களப்பணி) **திரு.** R. **பூபாலன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு. தென்னரசு** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

தொகுதி ஒருங்கிணைப்பாளராக (மகளிர்) **திருமதி. நிவேதா** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திருமதி. உதயகுமாரி** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

### தருமபுரி மேற்கு மாவட்டம்

மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளராக(களப்பணி) பாலக்கோடு தொகுதி நியமிக்கப்பட்ட **திரு.** PMS **ஆனந்த்** அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக **திரு.** TMP **தமிழ்வாணன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

பாலக்கோடு சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளராக (சமூக வலைத்தளம்) **திரு.** D.**இளவரசன்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்

**அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்,
தகவல் தொழில்நுட்ப அணி தி.மு.க.



திருச்சியில் பெரம்பலூர் பாராளுமன்ற எம்.பி. அருண் நேரு தெற்கு ரயில்வே கோட்ட ரயில்வே மேலாளர் பாலக் ராம் நேகி அவர்களை நேரில் சந்தித்து , ரயில்வே பணிகளை விரைந்து முடிக்க கோரிக்கை மனுவை அளித்தார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு மாநகராட்சி பெரியார் வீதியில் உள்ள தந்தை பெரியார் அண்ணா நினைவகத்தில் பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் மேயர் சு.நாகரத்தினம், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.சுகுமார், உதவி அலுவலர் செ.கலைமாமணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.



அரியலூர் சட்டமன்றத் தொகுதி, திருமானூர் கிழக்கு ஒன்றியம், ஏலாக்குறிச்சி ஊராட்சியில் ஒன்றிய கழக பொறுப்பாளர் கே. ஜி எஸ் .முருகன் தலைமையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் உறுதிமொழி ஏற்பு கூட்டம் அரியலூர் தொகுதி மேலிட பொறுப்பாளர் வளவனூர் ப. அன்பரசு, மாவட்ட துணைச் செயலாளர் சந்திரசேகரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட பிரதிநிதி மு. முத்தமிழ்செல்வன், ஒன்றிய துணைச் செயலாளர் க. மணிகண்டன், ஒன்றிய பொருளாளர் ஆனஸ்ட் அம்பிகாபதி, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கோவிந்தராஜ், மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் அறிவழகன், ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பெ. கருணாநிதி, கார்த்திக். ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் வி .கே .என் சிலம்பரசன். தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் பிரகாஷ், தினேஷ், கிளைக் கழக செயலாளர்கள் கோ. சின்னதுரை பாலு, பி.டி.ஏ சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தமிழ்நாட்டை தலை குனிய விட மாட்டோம் என உறுதிமொழி ஏற்றனர்.

### தமிழ்நாடு மக்களை ஒருங்கிணைக்கும்

# ‘ஓரணியில் தமிழ்நாடு’ திட்டத்தில் 2,23,921 பேர் சேர்ப்பு!

## மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. பேட்டி!

தருமபுரி, செப். 18-

தருமபுரி கிழக்கு மாவட்டம் முழுவதும் ஓரணியில் தமிழ்நாடு, வீடு தேடி உறுப்பினர் சேர்க்கை முகாமில் பென்னாகரம், தருமபுரி ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் 2,23,921 புதிய உறுப்பினர்கள் திமுகவில் இணைந்துள்ளனர் என கிழக்கு மாவட்ட பொருப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் மணி செய்தியாளர்கள் சந்திப்பின் போது தெரிவித்தார்.மேலும் அவர் பேசுகையில் கூறியதாவது:

கடந்த ஜூலை 1ம் தேதி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஓரணியில் தமிழ்நாடு என்ற இயக்கத்தை தொடங்கி வைத்தார்.இந்த இயக்கம் இன்று நாம் எதிர்கொள்ளும் பண்பாடு, பொருளாதாரம் மற்றும் அரசியல் அநீதிகளுக்கு எதிராக தமிழ்நாட்டின் ஒவ்வொருவரையும் ஒன்றிணைக்கும் இயக்கமாகும்.

தமிழர் பண்பாட்டை பறைசாற்றும் கீழடி புறக்கணிப்பு, இந்தி திணிப்பு, தமிழ்நாட்டுக்கான நிதி மறுப்பு, நீட் போன்ற நியாயமற்ற தேர்வுகள்,நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை சதி என தமிழ்நாட்டின் மண், மொழி, மற்றும் மானத்தின் மீது தொடர் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இவற்றையெல்லாம் எதிர்த்து தமிழ்நாட்டு மக்களை ஒன்றிணைக்க துவங்கப்பட்டது தான் இந்த ஓரணியில் தமிழ்நாடு.

தமிழ்நாட்டு முதலமைச்சர் கழகதலைவர் அவர்களின் அறிவிப்பின்படி திமுகவினர் தமிழ்நாடு முழுவதும் 68000 வாக்குச்சாவடிகளில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் நேரில் சென்று வாக்காளர்களை சந்தித்துள்ளோம்,ஓரணியில் தமிழ்நாடு மூலம் தமிழகம் முழுவதும் ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் திமுகவில் இணைந்துள்ளனர்.

அதனடிப்படையில் தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு மூலம் தருமபரி சட்டமன்ற தொகுதியில் 1,15,093 பேர், பென்னாகரம் தொகுதியில் 1,08,828 பேர் என மொத்தம் 2,23,921 புதிய உறுப்பினர்கள் இணைந்துள்ளனர். பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் அன்று அனைத்து வாக்குச்சாவடி பகுதிகளிலும் “தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன்” என உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெறும்.தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தில் இணைந்த குடும்பங்கள் ஒன்றுகூடி இந்த உறுதி மொழியினை ஏற்று தீர்மானத்தை முன்மொழி வார்கள்.அதே போல் கரூரில் நடைபெறும் முப்பெரு விழாவில் அனைத்து வாக்குச்சாவடிகளில் முன்மொழியப்பட்ட தீர்மானங்களை கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேடையில் நிறைவேற்றுவார்கள். செப்டம்பர் 20,21ஆம் தேதிகளில் ஓரணியில் தமிழ்நாடு பொதுக்கூட்டம் தலைமைக்கழகம் அறிவிக்கும் இடங்களில் தலைமை கழக பேச்சாளர்களை கொண்டு மாவட்ட அளவில் கூட்டங்கள் நடைபெறும் என தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர்.ஆ.மணி தெரிவித்தார்.

இந்த பேட்டியின் போது நகர செயலாளர் நாட்டான் மாது, ஒன்றிய செயலாளர்கள் பச்சியப்பன், ஏ.எஸ். சண்முகம், காவேரி, ஐ. டி.விங் கௌதம் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.





கோவை தெற்கு மாவட்டம், சூலூர் மேற்கு ஒன்றியம், சின்னியம்பாளையம் ஊராட்சியில் நடைபெற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் கோவை தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கி, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் முன்னெடுத்த “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை திட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட BLA2, BDA மற்றும் BLC நிர்வாகிகளுக்கு சால்வை அணிவித்து பாராட்டினார். இதில் சூலூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் அன்பரசு, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பசுமை நிழல் விஜயகுமார், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஜெயலலிதா உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.